# சின்னச் சின்னதாய்...



↑ பள்ளத்தூரில் அரசு பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனை கட்டிடத்தை திறந்து வைத்த அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன். உடன் ஆட்சியர் ஆஷா அஜித்.

## பள்ளத்தூரில் ரூ.28.50 லட்சத்தில் அரசு மருத்துவமனை கட்டிடம், ஆய்வகம் திறப்பு

● காரைக்குடி

காரைக்குடி அருகே பள்ளத்தூரில் நமக்கு நாமே திட்டத்தில் தனியார் பங்களிப்புடன் ரூ.28.50 லட்சத்தில் அரசு பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனை கட்டிடம், ஆய்வகம் கட்டப்பட்டது.

அதன் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தலைமை வகித்தார். கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தொடங்கி வைத்தார். மருத்துவ நலப்பணிகள் இணை இயக்குநர் பிரியதர்ஷினி, பேரூராட்சித் தலைவர் சாந்தி, துணைத் தலைவர் ருக்மணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.